

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (01.08.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர் பாபு, திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு–69, முத்துகுமரப்பா தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி மு.சரிதா மகேஷ் குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் திருச்சி திருவெறும்பூரில் அமைந்துள்ள அரசு மாதிரிப் பள்ளியில் முன்னறிவிப்பில்லா ஆய்வை மேற்கொண்டார். மாணவரின் மரணம் குறித்து கல்வி அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கேட்டறிந்து, பள்ளி மாணவர்களிடமும் கலந்துரையாடினார். மாணவர் பயின்று வந்த வகுப்பில் உள்ள மற்ற மாணவர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் நம்பிக்கை அளிக்கும் விதமாக ஊக்கமளிக்கும் உரை போன்ற நிகழ்ச்சிகளை ஒருங்கிணைக்குமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டுள்ளார்.

## கல்வித் தளத்தில் மட்டுமல்லாது பட்டியலின

# மக்களின் உரிமைகளுக்காக-பெண்ணுரிமைக்காக போராடியவர் பேராசிரியர் திருமதி வசந்திதேவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஆக.2-

மூத்த கல்வியாளர் பேராசிரியர் திருமதி. வசந்திதேவி அவர்கள் நேற்று இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “கல்வித் தளத்தில் மட்டுமல்லாது பட்டியலின மக்களின் உரிமைகளுக்காகவும், பெண்ணுரிமைக்காகவும் போராடியவர் பேராசிரியர் திருமதி. வசந்தி தேவி” என்று குறிப்பிட்டுள்ளார்.

மூத்த கல்வியாளர் பேராசிரியர் திருமதி. வசந்தி தேவி அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

மூத்த கல்வியாளரான பேராசிரியர் திருமதி. வசந்தி தேவி அவர்கள் மரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த வேதனையடைந்தேன்.

நெல்லை மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், மாநில மகளிர் ஆணையத் தலைவர், தமிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர் உள்ளிட்ட பல்வேறு உயர் பொறுப்புகளில் மிகச் சிறந்த பங்களிப்பினை ஆற்றியதோடு, சமூகத்தின் மீதும் பெரும் அக்கறை கொண்டவராகப் பேராசிரியர் வசந்தி தேவி அவர்கள் திகழ்ந்தார்.

தமிழ்நாடு தொடர்ந்து எதிர்த்து வரும் ‘தேசிய கல்விக் கொள்கை 2020’இன் தீமைகள் குறித்தும் மிகத் தீவிரமான பரப்புரையை அவர் மேற்கொண்டிருந்தார். பல்கலைக்கழக மானியக் குழுவின் புதிய வரைவு நெறிமுறைகளுக்கு எதிராகவும் உறுதியாகத் தனது கருத்துகளை முன்வைத்து வந்தார். அனைவருக்கும் சமச்சீரான கல்வி கிடைக்க வேண்டும் என இறுதிமூச்சு வரையில் போராடி வந்த திருமதி. வசந்தி தேவி அவர்கள், கல்வியானது மாநிலப் பட்டியலில் மீண்டும் சேர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தி வந்தவர் ஆவார்.

கல்வியில் மதவாதம், வியாபாரம், ஒன்றிய அரசின் அதிகாரக் குவிப்பு ஆகியவற்றுக்கு எதிராகத் தொடர்ந்து பேசி வந்தார். கல்வித் தளத்தில் மட்டுமல்லாது பட்டியலின மக்களின் உரிமைகளுக்காகவும் பெண்ணுரிமைக்காகவும் போராடிய செயற்பாட்டாளர் திருமதி. வசந்தி தேவி.

நமது திராவிட மாடல் அரசு பள்ளிக் கல்வித் துறையில் தொடங்கிய கலை வகுப்புகள், தேன்சிட்டு சிறார் இதழ் உள்ளிட்ட முன்னெடுப்புகளுக்குப் பாராட்டு தெரிவித்தும், திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைகள் வழங்கியும் ஊக்கப்படுத்தியவர்.

அவரது திடீர் மறைவு கல்வித் துறை மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டுக் களத்தில் ஈடு செய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளது. அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினர், கல்விப் புலத்தைச் சேர்ந்த அறிஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாம்! முதல்வர் துவக்கி வைக்கிறார்!

# மயிலை கிழக்குப் பகுதிக் கழகத்தினர் திரண்டு வாரீர்!

## பகுதிச் செயலாளர் எஸ். முரளி வேண்டுகோள்!

சென்னை, ஆக.2-

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த வட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கவனத்திற்கு பகுதிச் செயலாளர் மயிலை எஸ். முரளி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு: -

நலம் காக்கும் ஸ்டா லின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் துவக்கி வைக்க கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று வருகை தருகிறார்.

இன்று (20.8.2025 சனிக்கிழமை) காலை 8.30 மணியளவில் புனித பீட்ஸ் ஆங்கிலோ இண்டியன் மேல்நிலைப்பள்ளி சாந்தோம் நெடுஞ்சாலை, சாந்தோம். சென்னை4-ல் நடைபெறும் இந்நிகழ்வில்

இம்முகாமில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலைத.வேலு எம்.எல்.ஏ. மற்றும் அமைச்சர் பெருமக்கள். கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இம்முகாமில் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, எலும்பு மற்றும் மூட்டு மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் நோய், குழந்தை நலம், இருதய நோய் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு, தொண்டை மருத்துவம் மனநல மருத்துவம் 'Physiotherapy' நுரையீரல் மருத்துவம், ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி மருத்துவம் இரத்த பரிசோதனை சளி பரிசோதனை, எக்ஸ்ரே இசிஜி ECHO ஸ்கேன்ஆகிய சிறப்பு சிகிச்சைகள் அளிக்கப்பட உள்ளன.

இம்முகாமில் மருத்துவ காப்பீடு திட்ட சான்றிதழ் மற்றும் மாற்று திறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ் வழங்கப்படும். தேவைப்படும் உயர்சிகிச்சை மற்றும் பரிசோதனைகள் சிறப்பு மருத்துவர்களை கொண்டு மேற்கொள்ளப்படும்.

மயிலை கிழக்கு பகுதியை சார்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகி கள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள பொதுமக்கள் கழக நிர்வாகிகள் இந்த முகாமில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி கேட்டுக் கொண்டுள்ளார்.

### ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ முகாமை முதல்வர் துவக்கி வைக்கிறார்!

# மயிலை 125வது வட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## வட்டச் செயலாளர் அ.தவநேசன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.2-

மயிலை 125 வது வட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக பகுதி கழக வட்ட கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்களுக்கு வட்டச் செயலாளர் அ.தவநேசன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இன்று (2-8-2025 - சனிக்கிழமை) காலை 9 மணியளவில் சாந்தோம் புனித பீட்ஸ் பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலினின் உயர் தர பொது மருத்துவ முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைக்கிறார்.

நிகழ்ச்சியில் சுகாதார துறை அமைச்சர் மா.சுப்ரமணியம், மாவட்ட கழக செயலாளர்-மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ். முரளி, மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி மற்றும் துறை அதிகாரிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே இன்று காலை 8 மணியளவில் காமராஜர் சாலை நொச்சி குப்பம் முனையில் இருந்து 125வது வட்டக் கழகத்தின் சார்பில் மாபெரும் வரவேற்பு வழங்கப்பட உள்ளது. அது குறித்த ஆலோசனைக் கூட்டம் நேற்று மாலை 6 மணியளவில் பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி தலைமையில் டாக்டர் அம்பேத்கர் பாலம் சமூக நல கூடத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி வட்டத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகளும் முதல்வர் அவர்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு நிகழ்வில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழ் மொழியும் மோடி சுட்ட வடையும்

பாசிச மோடி அரசு தமிழ் உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளின் மேம்பாட்டிற்காக ஒதுக்கிய நிதியை விட சமஸ்கிருத மொழி மேம்பாட்டிற்காக ஒதுக்கிய நிதி 17 மடங்கு அதிகம் என்கிற அதிர்ச்சித் தகவலை “ஹிந்துஸ்தான் டைம்ஸ்” (Hindustan Times) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (Right To Information Act - RTI) மூலம் பெற்று வெளியிட்டுள்ளது.

ஆர்.டி.ஐ. தகவலின்படி ஒன்றிய மோடி அரசு 2014 15 ஆம் நிதி ஆண்டு முதல் 2024 - 25 ஆம் நிதி ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சமஸ்கிருத மொழி மேம்பாட்டிற்காக ரூ.2,532.59 கோடியை ஒதுக்கியுள்ளது. இது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஒடியா உள்ளிட்ட செம்மொழிகளுக்கு செலவிடப்பட்ட ரூ.147.56 கோடியை விட 17 மடங்கு அதிகமாகும். அதாவது அழிவின் விளிம்பில் உள்ள சமஸ்கிருத மொழிக்கு ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ரூ.230.24 கோடியும் மற்ற ஐந்து செம்மொழிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.13.41 கோடியும் ஒதுக்கியுள்ளது.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

மேலும், சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தமிழுக்கு 5 சதவிகிதத்திற்கும் குறைவாகவும், தெலுங்கு மற்றும் கன்னடத்திற்கு 0.5 சதவிகிதத்திற்கும் குறைவாகவும், மலையாளம் மற்றும் கன்னட மொழிகளுக்கு 0.2 சதவிகிதத்திற்கும் குறைவாகவும் நிதி ஒதுக்கி தென்னிந்திய மொழிகள் மீதான தன்னுடைய வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளது பாசிச மோடி அரசு.

இந்தி, உருது, சிந்தி ஆகிய செம்மொழிகளாக அங்கீகரிக்கப்படாத மொழிகளின் மேம்பாட்டிற்காக 2014-15 முதல் 2024-25 ஆண்டுகளுக்கு இடையில் ஒருங்கிணைந்த நிதியாக ரூ.1,317.96 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது சமஸ்கிருதத்திற்கு செலவிடப்பட்ட நிதியில் தோராயமாக 52.04 சதவிகிதம் ஆகும். அதாவது, இந்தி மொழிக்கு 426.99 கோடி மற்றும் சிந்தி மொழிக்கு ரூ.53.03 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 21.99 சதவிகிதம் மக்கள் தமிழ் உள்ளிட்ட மேற்குறிப்பிடப்பட்ட 5 செம்மொழிகள் பேசுபவராக உள்ளனர். ஆனால் வெறும் 24,821 பேர் மட்டும் பேசக்கூடிய, அழியும் தருவாயில் உள்ள சமஸ்கிருத மொழிக்கு ஆயிரக்கணக்கான கோடிகளில் நிதி ஒதுக்கப்படுகிறது.

இது குறித்து தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் கருத்து தெரிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் - கழக தலைவர் “சமஸ்கிருதத்துக்கு கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்படுகிறது. தமிழ் மொழி மற்றும் இதர தென்னிந்திய மொழிகளுக்கு மத்திய அரசின் முதலைக் கண்ணீரை தவிர ஒன்றும் கிடைப்பதில்லை. போலிப் பாசம் தமிழுக்கு; பணமெல்லாம் சமஸ்கிருதத்துக்கு” எனப் பதிவிட்டுள்ளார்.

**பாசிச மோடி கும்பலானது தமிழ்நாட்டில் வளர்வதற்கும் தேர்தலில் ஒரு இடத்திலாவது வெற்றி பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மோடி தமிழ்நாட்டிற்கு வந்தால் தமிழில் பேசுவதும், நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் திருக்குறள் வாசிப்பதும், காசி தமிழ்சங்க மாநாடு நடத்துவது ராஜராஜ சோழன் விழாவில் கலந்து கொண்டு நடிப்பது உள்ளிட்ட போலி நாடகங்கள் பல நடத்தப்படுகின்றன.**

ஆனால் கீழடி ஆய்வறிக்கையை வெளியிடாமல் இருப்பது, இந்தி மொழியை வலுக்கட்டாயமாக திணிப்பது, புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்தான் தமிழ்நாட்டிற்கு கல்வி நிதி தரப்படும் என மிரட்டுவது ஆகிய நடவடிக்கைகள் பாசிச கும்பலின் தமிழ் ’பற்றை’யும் தமிழ்நாட்டு மக்கள் மீதான அக்கறையையும் ஏற்கெனவே அம்பலப்படுத்திவிட்டன.

அழியும் தருவாயில் உள்ள சமஸ்கிருதத்திற்கு பெரும் அளவிலான நிதியை ஒதுக்கிவிட்டு தமிழ் உள்ளிட்ட பிற மொழிகளுக்கு சொற்பமான நிதியை மட்டும் ஒதுக்கி இருப்பது தற்போது அம்பலமாகி இருப்பதன்மூலம் பாசிச கும்பலின் முகத்திரை மீண்டும் ஒரு முறை கிழித்தெறியப்பட்டுள்ளது.




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அவைக் குழு ஆய்வுக் கூட்டம் அவைக் குழுவின் தலைவரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் தலைமையில், தேனி மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங், ஐ.ஏ.எஸ்., முன்னிலையில் தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இவ்வாய்வுக் கூட்டத்தில் அவைக் குழு உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### ஈரோடு மத்திய மாவட்டம்

## ஆப்பக்கூடல் மற்றும் ஊத்துக்குளி பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

**தலைமைக் கழக அறிவிப்பு!**

ஈரோடு மத்திய மாவட்டம், பவானி தெற்கு ஒன்றியம், ஆப்பக்கூடல் பேரூர்ச் செயலாளர் கோபால்சாமி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. எஸ்.சீனிவாசன்** (22ஏ, செங்குட்டை ரோடு, புதுப்பாளையம், ஆப்பக்கூடல், ஈரோடு - 638 315) அவர்கள் ஆப்பக்கூடல் பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும்;

ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம், ஊத்துக்குளி பேரூர்ச் செயலாளர் எஸ்.ராசுகுட்டி அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. பெ.திருமூர்த்தி** (278, குன்னத்தூர் ரோடு, ஊத்துக்குளி ஈரோடு மாவட்டம்.) அவர்கள் ஊத்துக்குளி பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-08-2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

### ஓசூர் மாநகரம், கிழக்கு பகுதி 30வது வட்டம் மற்றும் தெற்கு பகுதி, 37வது வட்டம் ஆகிய,

## வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

**தலைமைக் கழக அறிவிப்பு!**

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகரம், கிழக்கு பகுதி, 30வது வட்டச் செயலாளர் ஜி. நாகராஜ் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு.ஆர்.நாகராஜ்**, (212/108, தேர்பேட்டை, ஓசூர் - 635 110) அவர்கள் 30வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

தெற்கு பகுதி, 37வது வட்டக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு. கே.சையது அபுதாகீர்**, (58, 2வது பேஸ், டிவிஎஸ் நகர், தளி ரோடு, ஓசூர் - 635 110) அவர்கள் 37வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-08-2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்

### ஓசூர் மாநகரம்,

## தெற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

**தலைமைக் கழக அறிவிப்பு!**

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூர் மாநகரம், தெற்கு பகுதிக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **திரு.எம்.ராஜா** (ஆர்.கே. அவென்யூ, தின்னூர், ஓசூர் - 635 109) அவர்கள் தெற்கு பகுதிக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-08-2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம்

## தாராபுரம் கிழக்கு, தாராபுரம் மேற்கு ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் மாற்றியமைப்பு!

**திருத்தம்**

**தலைமைக் கழக அறிவிப்பு!**

கடந்த 31-05-2025 அன்று முரசொலியில் வெளிவந்த ஒன்றிய பிரிப்பு அறிக்கையில் பின்வரும் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது.

திருப்பூர் கிழக்கு மாவட்டத்தில் தாராபுரம் கிழக்கு ஒன்றியத்தில் உள்ள நஞ்சியம்பாளையம், பொம்மநல்லூர், அலங்கியம் 3 ஊராட்சிகள் இனி, தாராபுரம் மேற்கு ஒன்றியத்தில் தொடர்ந்து செயல்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 01-08-2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.